# கலிவிடு அந்தாதி

பதிப்பு
கு.சுதாகர்

நெறியாளர்
வீ.அரசு
பேராசிரியர்-தலைவர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005
ஜூலை - 2006

# கலிவிடு அந்தாதி

சுவடியியலும் பதிப்பியலும்
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பு

**கு. சுதாகர்**

நெறியாளர்

**வீ. அரசு**

பேராசிரியர் - தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை - 600 005**
**ஜூலை - 2005**

# நெறியாளர் சான்றிதழ்

**பேராசிரியர் வீ. அரசு,**
துறைத்தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**'கலிவிடு அந்தாதி'** எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச் **'சுவடியியலும் பதிப்பியலும்'** எனு பட்டயம் பெறுவதற்காக கு. சுதாகர் அவர்கள் என மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப் இவர்தம் தனி முயற்சியில் உருவானது என்று சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

(பேராசிரியர் வீ. அரசு)

நாள் : 27-07-05
இடம் : சென்னை-5

# பதிப்பாளர் உறுதிமொழி

**கு. சுதாகர்,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**'சுவடியியலும் பதிப்பியலும்'** என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் **'கலிவிடு அந்தாதி'** எனும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்

(கு. சுதாகர்)

நாள் : 27-07-2005.
இடம் : சென்னை-5.

என் சிற்றன்னை ஆ. நிர்மலா
அம்மையாருக்கு ...

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | i-iii |
| ஆராய்ச்சியுரை | iv-vii |
| சுருக்கக் குறியீட்டு விளக்கம் | |
| 1. தண்டபாணி சுவாமிகளின் சிறப்புகள் | 1 |
| 2. அந்தாதியின் வளர்ச்சி | 8 |
| 3. கலிவிடு அந்தாதி | |
| காப்புச் செய்யுள் | 13 |
| வைகுமொழில் வேலனே | 15 |
| மறைச்சீர் விளைந்த வலியானே | 19 |
| நின்மல மூர்த்தியே | 23 |
| கடவுளர்க்கு அருள்சேயே | 25 |
| வணிகனென்கை வழக்கின்பாற்றே | 29 |
| வெற்பினத்தொறுநின்றோனே | 33 |
| மறுமுகந் தமுதே | 37 |
| விமலர்விழி உதவவரும் விந்தையானே | 39 |
| சூர்வெருளும் வேல் வீரனே | 43 |
| கருணை மாக்கடலே | 45 |
| பின்னிணைப்பு | |
| செய்யுள் முதற் குறிப்பகராதி | 49 |
| அருஞ்சொற்பொருள் | 54 |
| முருகனை சிறப்பிக்கும் பெயர்கள் | 60 |
| தண்டபாணி சுவாமிகள் நூற்பதிப்பு | 64 |
| துணைநூற்பட்டியல் | 69 |
| சுவடியின் நகல் | |

## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| தொல். | - | தொல்காப்பியம் |
| பொருள். | - | பொருளதிகாரம் |
| செய்யுள். | - | செய்யுளியல் |
| புறம். | - | புறநானூறு |
| இளம். | - | இளம்பூரணர் |
| நூற். | - | நூற்பா |
| குறள். | - | திருக்குறள் |
| தனி. பா. | - | தனிப்பாடற் திரட்டு |

## பதிப்புரை

தமிழ்ச் சமூகத்தில் சுவடி வாசிப்பும் எழுதுதலும் என்பது பன்நெடுங்காலந்தொட்டே வந்துள்ளது. சுவடி எழுதுதல் என்பது குறிப்பிட்ட ஒருசாரார்கள் மட்டுமே அறிந்திருந்தனர். இச்சுவடிகள் சமயப்பெரியோர்கள், அரச குடும்பத்தினர், செல்வ செழிப்பானோர் இல்லங்களில் பாதுகாப்பாக இருந்தன. பதிப்பு என்ற நிலை ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே வந்தது என்றாலும் சுவடிகளைக் காலந்தோறும் படியெடுத்தல் நிகழ்ந்ததால் படியாசிரியர் களையே முதல் பதிப்பாளர்கள் என்று கூறலாம்.

கோயில்களிலும், மடங்களிலும், தனிப்பட்ட மனிதர் களிடமும் இருந்த சுவடிகளைச் சேகரிக்கும் பணியானது ஐரோப்பியர்களின் காலத்தில் நிகழ்ந்தது. இதில் ஜான் மெக்கன்சி, லேடன் பாதிரியார், பிரொலன் போன்றோர் மிகவும் குறிப்பிடத்தக்கவர்களாக உள்ளனர். அச்சு ஊடகத்தின் வருகையினால் சுவடியில் இருந்தவை யெல்லாம் அச்சடிக்கும் நிலைக்கு வந்தது. 1577 ஆம் ஆண்டில் 'தம்பிரான் வணக்கம்' அச்சடிக்கப்பட்டது. இதுவே இந்தியாவில் தமிழில் முதல் முதலில் அச்சடிக்கப்பட்டது.

அச்சு இயந்திரத்தை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்று 1835 ஆம்ஆண்டில் பதிப்புச் சட்டம் வந்த பின்னர் பலரும் அச்சுப்பணியில் ஈடுபடுகின்றனர். தமிழின் பெருமையை உணர்த்தும்

தொல்காப்பியம், திருக்குறள், சங்க இலக்கியம், நன்னூல் போன்றவைகள் 1835 களில் இருந்து 1920 க்குள் பெரும்பான்மை அச்சில் ஏறிவிட்டன. இதில் மழவை மகாலிங்கம், நமச்சிவாய முதலியார், ஆறுமுக நாவலர், சி.வை.தா, உ.வே.சா, பின்னத்தூர் நாராயணசாமி ஐய்யங்கார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாக இருந்தனர். இக்காலகட்டத்தில் சித்தாந்த தீபிகை, ஞான போதினி, செந்தமிழ் போன்ற இதழ்களின் பங்கும் குறிப்பிடத்தக்கது.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத் துறையால் நடத்தப்பெறும் **சுவடி மற்றும் பதிப்பியல்** என்னும் பட்டயப்படிப்பில் பயில்வதற்கு வாய்ப்பளித்து, சுவடியோடு நேரடியாக ஊடாடவும், படிக்கவும், எழுத்து முறைமைகளைக் கற்கவும் வழி வகுத்தது. சுவடியைப் பதிப்பிக்கும் முறைமைகளையும் சுவடியைப் பதிப்பிப் பதற்கு வழிகாட்டியாக இருந்த மதிப்பிற்குரிய **பேராசிரியர் வீ. அரசு** அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியைத் தந்து உதவிய புலவர் ப.வெ. நாகராசன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுவடி வகுப்பில், சுவடியோடு ஊடாடவும் எழுதவும் பயிற்சியளித்து, பிழைகளைத் திருத்தியும், எந் நேரத்திலும் ஐயங்களைத் தெளிவுபடுத்திய **முனைவர் ய. மணிகண்டன்** அவர்களுக்கும், சிறப்பு வகுப்புகளில்

பிற துறை சுவடியை அறிமுகப்படுத்திய முனைவர் **கி. ஜெயக்குமார்** அவர்களுக்கும் கிரந்த எழுத்துக்களைக் கற்றுக்கொடுத்த **பேராசிரியர் சீனிவாசன்** அவர்களுக்கும் சுவடி இறுதிக் குறிப்பை விளக்கிய **முனைவர் சூ. நிர்மலா தேவி** அவர்களுக்கும், நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு சூழல்களில் துணை நின்று உதவிய அனைத்து நண்பர்களுக்கும் மெய்ப்புத் திருத்தம் செய்து கொடுத்த திரு **ஸ்ரீ. பிரேம்குமார்** அவர்களுக்கும் கனிவான முறையில் கணிப்பொறி வரைகலைகளையும், அச்சுப் பணியையும் சிறப்பான முறையில் பயன்படுத்தி நூலினை வடிவமைத்த டுடே கிராபிக்ஸ் அச்சகத்தார் திரு **ஆர். பாபு** அவர்களுக்கும் உடன் பணியாற்றிய திருமதி **ஆனந்தி, செல்வி கோ. கோகிலா**, செல்வி பா. அம்சவள்ளி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆராய்ச்சியுரை

சுவடியைப் பாதுகாத்தல் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாக உள்ளது. அவ்வகையில் ஒரு சில முக்கியமான நூலகங்கள் சுவடிகளைப் பாதுகாத்து வருகின்றன. அதில் சென்னைக் கீழ்த்திசைச் சுவடியியல் நூலகம், உ.வே. சாமிநாதய்யர் நூலகம், தஞ்சை சரஸ்வதி மஹால், உலக தமிழாராய்ச்சி நிறுவனம் போன்றவைகள் குறிப்பிடத் தக்கவையாக உள்ளன.

சுவடியைப் பதிப்பிப்பதற்காகச் சுவடியைத் தேடிச் சென்ற போது சென்னைக் கீழ்த்திசைச் சுவடியியல் நூலகத்தில் நேரடியாகச் சுவடியைக் காணவிடாமல், குறித்துக் கொடுக்கும் சுவடிகளை மட்டுமே காட்டினார்கள். சுவடிகளில் சில சிதைந்தும் தாள் வடியுமாகவே இருந்தது. தேடிக் கொடுப்பதிலும் சில எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தனர். அங்குக் கிடைக்காததால் சுவடியைத் தேடிக் கொண்டிருந்த சூழலில் புலவர் ப.வெ. நாகராசன் அவர்கள் திருவாமாத்தூர் சென்று கௌமார சபையில் இருந்து தண்டபாணி சுவாமிகளின் சுவடிகளைக் கொண்டு வந்திருநதார். அவரிடத்தில் உதவி நாடியபோது தண்டபாணி சுவாமிகளின் 'கலிவிடு அந்தாதி' என்னும் சுவடியைத் தந்து உதவினார். சுவடியைப் பாடல்களாக எழுதி அவரிடத்தில் யாப்பினையும் முனைவர் ய. மணிகண்டன் அவர்களிடத்தில் பிழைகளையும் நீக்கிக் கொண்டேன்.

தண்டபாணி சுவாமிகள் 'கலிவிடு அந்தாதி' என்னும் நூலில் பத்துப் பத்துப் பாடல்களுக்கும் வெவ்வேறான யாப்பினைப் பயன்படுத்தியுள்ளார். பாட்டியல் கூறும் இலக்கணத்தில் 'நூற்றந்தாதி' என்னும் வகையைச் சார்ந்தது இந்நூல்.

இதில் கலிவிருத்தம், கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், கலிநிரைத்துறை என்று பல வகையான யாப்பு வடிவங்களைக் கொண்டுள்ளார். ஒரு பாடலில் பயன்படுத்தும் வாய்ப்பாட்டினைப் பத்துப் பாடல்களிலும் ஒரே வகையாக அமைந்துள்ளது. இச்சுவடியானது நீண்டதாகவும், சிறிய எழுத்துக்களைக் கொண்டதாகவும் அமைந்திருக்கிறது. சுவடியின் அளவு: நீளம் 38 செ.மீ. கொண்டதாகவும் அகலம் 4 செ.மீ. கொண்டதாகவும் இருக்கிறது. சுவடியில் எழுதப்பட்ட இடத்தின் நீளம் 34 செ.மீட்டராகவும் சுவடியின் எண்ணிக்கை 8 ஆகவும் முன்னும் பின்னுமாக 12 பக்கங்களால் அமைந்திருக்கிறது. ஒரு பாடல் பெரும்பான்மை 1.5 அடியில் முடிவதாகவும் மிஞ்சினால் 2 அடிக்குள் முடிவதாக அமைந்திருக்கிறது. இச்சுவடியின் எழுத்துக்கள் ஒற்றுகள் இல்லாமலும் வடமொழிச் சொற்கள் கலப்பின்றியும் புரியும்படியாக அமைந்துள்ளது.

'கலிவிடு அந்தாதி' என்னும் நூல் எழுதுவதற்கான காரணத்தைத் தன்னுடைய காப்புச் செய்யுளிலேயே கூறுகின்றார்.

" தென் குருகை வயிணவன்முன்
சிறைவிடந்தாதி திப்பனுவலன்
நன்குரைத்து னடியவர்தந்
நடுவிருக்கை நிசமாகின"

என்று குறிப்பிட்டு உள்ளதைக் காணலாம். சிறையில் இருந்து விடுபட வேண்டும் என்று தென்குருகை வயிணவனாகிய திருமால் மீது வைணவச் சமயத்தாரால் பாடப்பட்டிருக்கும் தன்மையைக் கண்டு வறுமை யிலிருந்து விடுபடவேண்டுமென்று சைவச் சமயத்தின் சிறப்பினை எடுத்துக் கூறும் வகையில் வென்குருவாகிய முருகப்பெருமான் மீது பாடப்படுவதை,

"மென்குதலை யேன்சொல்கலி
விடந்தாதி வீண்போமோ
வென்குருவா கிய முருகா
யானைமுகற் கிளையோனே"

இதன் மூலமாக முருகப்பெருமான் மீது தண்டபாணி சுவாமிகள் பாடவேண்டுமென்ற நோக்கம் கொண்டிருந்ததைக் காணமுடிகின்றது. வறுமை என்னும் நாயினைப் போக்கவல்ல ஆற்றல் முருகப் பெருமானிடத்தில் உள்ளது என்றும் அவன் வறுமையை க்கும் விமலன் என்றும் கூறுகின்றார்.

வறுமையைச் சித்திரிக்கும் இடங்களில் மிகவும் காடிய நோயாகக் காட்டுகின்றார். அவை பெருங்கலி, டிநோய், கலிப்பேய், மிடியாலி என்றெல்லாம்

கூறுவதைக் காணலாம். இதனைப் போக்கவல்ல முருகனைப் பலவாறு சிறப்புப் பெயர்களால் புகழ்ந்தும் மனமுருகியும் பாடியுள்ளார். வைணவச் சமய நூலான சிறைவிடு அந்தாதி கலித்துறை என்னும் ஒரே ஒரு யாப்பு வடிவத்தைக் கொண்டது. ஆனால் வண்ணச்சரகம் தண்டபாணி சுவாமிகளோ கலிவிடு அந்தாதியில் பத்துவகையான யாப்பினைப் பயன்படுத்தியுள்ளார். முருகனின் சிறப்பு பெயர்களாகக் கலிவிடு அந்தாதியில் தண்டபாணி சுவாமிகள் குறிப்பிடுவதைப் பின்னிணைப்பில் காணலாம்.



வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

## தண்டபாணி சுவாமிகளின் சிறப்புகள்

தமிழர்கள் இலக்கிய செழுமைமிக்க பாரம்பரியத்தை இரண்டாயிரம் ஆண்டு காலம் காத்து வந்துள்ளனர் என்பது சிறப்புக்குரிய ஒன்றாகும். இதற்காகப் பல புலவர்களும் தங்களின் வாழ்வையே அர்ப்பணித்துள்ளனர். தமிழரின் பெருமையை அறியும் வகையில் தொல்காப்பியர், திருவள்ளுவர் தொடங்கி குமரகுருபரர், வள்ளலார் என்று பலரும் தொண்டாற்றி வந்துள்ளனர். இப்பாரம்பரியம் மிக்க தமிழ்ச் சமூகத்தில் 'வண்ணச்சரபம்' என்று போற்றப்படும் தண்டபாணி சுவாமிகள் மிகவும் குறிப்பிடத் தக்கவராக உள்ளார். தமது வாழ்நாளின் பெருமளவைத் தமிழ் உலகிற்கு அர்ப்பணித்துள்ளார்.

### இளமைக் காலமும் கல்வியும்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், செந்தினாயகம்பிள்ளை, பேச்சிமுத்து அம்மை இருவருக்கும் மகனாகப் பிறந்தார். பல காலம் குழந்தையின்றி பல தலங்கள்சென்று வரமிருந்துப் பெற்றதாக தண்டபாணி சுவாமிகளைக் குறிப்பிடுகின்றனர். இவர் பிறக்கையில் 'சங்கரலிங்கம்' என்ற பெயரையே இட்டனர். இவர் 1839 ஆம் ஆண்டு கார்த்திகை திங்கள் 16 ஆம் நாள் திருநெல்வேலியில் பிறந்தார். இளமையிலேயே கூர்மையான அறிவினை உடையவராகத் திகழ்ந்தார். எழுத்தாணி கொண்டெழுதிப் படிக்கும் பண்பினை கொண்டிருந்தார்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவருக்(கு)
எழுமையும் ஏமாப் புடைத்து."

என்ற குறளின்படி மிக விரைவாகக் கல்வியில் தேர்ச்சி பெற்றார். ஆசிரியரே வியக்கும் வகையில் புலமை மிக்கவராகத் இளமை ஆசிரியரே வியக்கும் வகையில் புலமைமிக்கவராகத் திகழ்ந்தார். இளமைப் பருவத்திலேயே தந்தையை இழந்தார். சீதாராம நாயுடு என்பவரின் உதவியால் விநாயக மந்திரமும் இலட்சுமி மந்திரமும் கற்றார். இவரின் ஆர்வத்தைக் கண்டு முருகப் பெருமானின் ஆறெழுத்து மந்திரத்தைச் சீதாராம நாயுடு கற்றுக் கொடுத்தார்.

**புலமைத் திறன்**

முருகப் பெருமான் மீது அதிக பக்தி கொண்டு இருந்தார். சிற்றிலக்கிய வகையாகப் பிள்ளைத் தமிழ், மாலை, உலா, திரட்டு, பதிகம், அந்தாதி, அனுபூதி, ஊசல் எனப் பல வடிவங்களில் பாடல்கள் இயற்றியுள்ளார். முருகப் பெருமானை மட்டும் பாடாது, திருமால், கணபதி, சடகோபர், ஔவையார் என்று பலரையும் பாடியுள்ளார்.

தமிழின் சிறப்பினைப் பல்வேறு இடங்களில் தண்டபாணி சுவாமிகள் எடுத்துக் கூறுகின்றார். அதனை,

"தமிழே உயர்ச்சியென்று சீட்டுக்
கொடுத்த பெருமானே"

என்று ஒரு திருப்புகழைப் பாடியுள்ளார். இதுபோன்றே இவருடைய 'தமிழலங்காரம்' என்ற நூல், நூறு கட்டளைக்

கலித்துறைகளால் பல வரலாறுகளைச் சான்று கூறி தமிழ்மொழிக்குரிய சிறப்பினை விளக்குவதாக உள்ளது.

"தமிழ்மொழிக் குயர்மொழி தரணியில்
உளதெனில்
வெகுளியற் றிருப்போன் வெறுப்புல வோனே"

என்று இவரியற்றிய அறுவகையிலக்கணத்தில் கூறுவதிலிருந்து, இவரது தமிழ் மீதான பற்றினை நன்கு அறியலாம்.

தமிழுக்குச் சிறப்பினைச் சேர்க்கும் வகையில் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இலக்கியம். இலக்கணம், என்று இருதுறைகளிலும் பல நூல்களைப் பாடியுள்ளார். வண்ணத்தினைச் சிறப்பாகக் கையாண்டவர் களில் தண்டபாணி சுவாமிகள் குறிப்பிடத்தக்கவர். இவர் அறுவகை இலக்கணத்தையும் ஏழாம் இலக்கணத்தையும் எழுதியுள்ளார். இவற்றில் தமிழ்மொழியின் சிறப்பை ஆங்காங்கு எடுத்துக் காட்டுவதை நாம் காண்கிறோம்.

தண்டபாணி சுவாமி இனிமையான தன்மைக் கொண்டவராக விளங்கினார். இவர் வடலூர் இராமலிங்க சுவாமிகள் இடத்தில் மன்னிய நட்பினைக் கொண்டிருந்தார். பல சந்தர்ப்பங்களில் அவருடன் உறவாடியுள்ளதை,

"அவனுடன் மூன்று காலம்
அளவிளாய்ப் பேசி உள்ளேன்
எவளவும் பேதமின்றி
என்கருத் திவைத்தே சொன்னான்"

என்று குருபரத்தத்துவம் என்னும் நூலில் சுவாமிகள் கூறுகின்றார். இவருடைய சந்தப்பாடல்களைக் கேட்டு மகிழ்பவராக இராமலிங்க சுவாமிகள் இருந்தார். இதனை,

"மிடியில் சீர் வடலூரான் முதற் புலவோர்
கேட்டுளம் மிக வியந்ததுவே"

என்று இராமலிங்க சுவாமிகள் இவரின் சந்தப் பாடல் குறித்து மகிழ்வதை இப்பாடல் மூலம் அறிய முடிகின்றது.

**சமயப் பொதுமை**

சைவமும் வைணவமும் தோன்றிய காலம்தொட்டே சண்டைகள் நிகழ்ந்து வந்துள்ளன. சமயச் சண்டையினால் தமிழ்ச் சமூகத்திற்கு எண்ணற்ற சுவடிகள் இழந்தும் இருக்கிறது எழுந்தும் இருப்பதைக் காணலாம். இவற்றில் பண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எல்லாச் சமயத்தாரிடமும் அன்பு கொண்டிருந்தார். சிவன், முருகன், என்று சைவக் கடவுள்களை மட்டும் பாடாது திருமால், இலட்சுமி, கணபதி, சடகோபர், என்று பலரையும் பாடியுள்ளார்.

வைணவ சமயத்தார், இவரைக் கேள்வி எழுப்பிய போது திருமால் மீது கொண்டிருந்த பக்தியினை,

"சிறிது நாள்பொது வேடமிட்டுலவினேன்
அவற்றினுள் திருநாமக்
குறியி ரண்டுமென் தோள்களிற் பொலிந்தன"

என்று கூறுவதிலிருந்து சைவத்தைப் பாவித்ததைப் போல் வைணவத்திலும் ஈடுபாடு கொண்டுள்ளதைக் காண்கிறோம்.

"பின்னர் நாட்சில போய்நெடு மால் எனும்
பிறங்கி, இப்பரிவுண்டாம்
முன்னம் உள்ளவா நெற்றியிற் றிரியென
பொழிந்தன"

என்று 'விட்டுண் நெரிசனச் சருக்கத்தில்' திருமால் தன்னுள் நிலைக்கொண்டிருப்பதைக் குருபர தத்துவ நூல் காட்டுகிறது.

**கௌமார மடாலயம்**

தனது வாழ்நாள் முழுவதையும் தலங்கள் தோறும் சென்று இறைவனை வழிபடுவதிலேயே கழித்தார். செல்லும் இடமெல்லாம் பக்தியோடு இறைவனைத் துதித்தார். தனது வாழ்க்கையை 1898 இல் இருந்து திருவாமாத்தூரிலேயே தங்கி ஒன்பது ஆண்டுகள் வாழ்ந்து இறையருளை அடைந்தார். இவருக்குப் பின் வந்த சீடர்கள் இவரையே ஆதிகுரு முதல்வராகக் கொண்டு கௌமார மடத்தின் மூலமாக இவருடைய பாடல்களை வெளியிட்டனர்.

தண்டபாணி சுவாமிகளின் ஏராளமான இலக்கியங்கள் 'கௌமார சபை' என்னும் மடத்தினால் வெளியிடப்பட்டது.

இம்மடம் மிகவும் பாதுகாப்பாக தண்டபாணி சுவாமிகளின் சுவடிகளைப் பாதுகாத்து வைத்திருந்தது. பலரும் கேட்டு வாங்கி சென்றும் பதிப்பித்துள்ளனர். தற்போது பதிப்பிக்கப்படும் 'கலிவிடு அந்தாதி' என்னும் சுவடியும் அங்கிருந்து கொண்டுவரப்பட்டதே என்பதைக் கூறியாக வேண்டும்.

**முருகனின் சிறப்பு**

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தான் எழுதியவைகளில் பெரும்பான்மை முருகனைப் போற்றி துதிப்பதாகவே இருக்கிறது. அந்தாதி, பதிகம், திரட்டு, மாலை கலம்பகம் என்று எல்லாச் சிற்றிலக்கிய வகைகளிலும் பாடியுள்ளார். அதில் முருகானுபூதி, சென்னைக் கந்தக்கோட்ட தோத்திரத்திரட்டு, முருகப்பெருமாள் படைவீட்டு பாமாலை என்று கூறிக் கொண்டே போகலாம்.

முருகனின் சிறப்பை இராமநாதபுரம் சேதுபதியிடம் வாதிட்டுப் பாடும் விதத்தை,

"முருகனுக்கு மூவாறு முன்புதொட்டுக் காத்தல்
உருகுமயில் ஈதல், உறுபூண்- பெருகுசெவி
உண்மகிழ்ச்சி சேர்ப்ப(து) உலாதனைச்சூழவிடல்
கண்விண் பெண் பொன்பிண் கனி" (தனி. பா)

என்று முருகனை மட்டுமே சிறப்பித்துக் காட்டுகின்றார்.

'கலிவிடு அந்தாதி' என்று பதிப்பிக்கப்படும் இந்நூலிலும் தண்டபாணி சுவாமிகள் முருகனைப் பலவாறு புகழ்ந்துரைப்பதைக் காணலாம். நின்மலமூர்த்தியே, கந்தக்கடம்பனே, வைகுவெழில் வேலனே என்றெல்லாம் கூறுவதையும் வறுமை என்னும் கொடிய நோயை போக்கவல்ல ஆற்றல் முருகப் பெருமானுக்கே உள்ளது என்பதையும் வறுமை என்னும் கொடிய பேயினை அகற்ற வேண்டும் என்று பாடல் தோறும் வலியுறுத்துவதையும் காண்கிறோம்.

## அந்தாதியின் வளர்ச்சி

தமிழில் நெடுங்காலமாகப் புதுப்புது இலக்கிய வகைமைகள் தோன்றியவண்ணமாய் உள்ளது. காலச் சூழலுக்கும் அரசியல் மாற்றத்திற்கும் உட்பட்டு இலக்கியங்கள் உருவாகியுள்ளது. காலந்தொட்டு மாற்றம் நிகழ்ந்துள்ளதைச் சங்க இலக்கியம், நீதி இலக்கியம், காப்பியங்கள், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியங்கள், நாட்டுப்புற இலக்கியங்கள் வளர்ந்ததோடு யாப்பு மாற்றங்களும் வடிவ மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன.

"விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"

(தொல். பொருள். செய்யுள். இளம். நூற்: 227)

என்று தொல்காப்பியர் கூறுவதில் இருந்து புதுமையான இலக்கிய வகைமைகள் காலத்திற்கு ஏற்றாற்போல் உருவாகி வந்திருப்பதை அறியமுடிகின்றது.

பிரபந்தம் என்ற சொல் தமிழில் சிற்றிலக்கியம் என்று பயன்படுத்தப்பட்டது. இதற்கான விளக்கம் சரிவர கூறப்படவில்லை. அந்தாதி என்னும் சொல் அந்தம்- ஆதி என்று பிரியும். அந்தம்- முடிவு என்றும் ஆதி- தொடக்கம் என்று பொருள் கூறுகின்றனர். இவ்விலக்கிய வகைமை கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் உருவானது என்றாலும் சங்க இலக்கியங்களிலேயே சான்றுகள் காணக்கிடக்கின்றன.

ஐங்குறுநூற்றில் தொண்டிப்பத்தில் 118ஆம் பத்து அந்தாதியாக அமைந்துள்ளது. புறநானூற்றில் அந்தாதி வகைமை ஓரிரு பாடல்களில் ஆளப்படுவதைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

"மண்டிலானிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புனைவரு வளியும்
வளித்தலை இயதீயும்
தீமுரணிய நீருமென்றாங்கு
ஐம்பெரும் பூதத்தியற்கை போல" (புறம்: 2)

இப்பாடல் அந்தாதியால் அமைந்திருப்பதைக் காண்கிறோம். கானல் வரியில் பல பாடல்கள் அந்தாதியாக அமைந்துள்ளன.

### அந்தாதிக்குரிய இலக்கணம்

இவ்விலக்கியம் தனியொரு வகைமையாகக் கி.பி 8 ஆம் நூற்றாண்டில் உருவானது என்றாலும் சிறுசிறு வடிவங்களில் தொன்மையான இலக்கண நூல்களில் ஆங்காங்கு ஆளப்பட்டுள்ளன.

"எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்"

(தொல்.பொருள். செய்யுள். இளம். நூற். 71)

என்னும் தொல்காப்பிய நூற்பாவிலேயே குறித்த அடிக்குள் பொருள் முடியும்படி அமைத்தல் வேண்டும் என்பது தெரிகிறது.

இதனையே பின்வரும் பவணந்தியார் விரிவாக வகைப்படுத்திக் கூறுவதைக் காண்கிறோம். இதற்கான இலக்கணத்தை கூறவரும் யாப்பிலக்கணம்,

"ஈறு முதலாத் தொடுப்பழந் தாழியென்
றோதினர் மாதோ உணர்ந்திசினோரே"

(நூற்: 20)

என்று வகுத்துக் கூறுகின்றது. இதற்குத் தெளிவானதொரு வரையறைக்குட்பட்ட இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. 16 ஆம் நூற்றாண்டில் உருவான பிரபந்த மரபியல்,

"பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்
தொண்ணிற் றாறெனும் தொகைய தான"

(நூற்:1)

பிரபந்தங்கள் 96 என்று கூறுவதைக் காணலாம்.

அந்தாதிக்கு இலக்கணம் கூறவரும் பாட்டியல் நூல்கள் அதற்குள் இருக்கும் பகுப்புகளையும் கூறுகிறது. அவை ஒலியந்தாதி, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, கலியந்தாதி என்று நான்கு வகைப்படுத்தியுள்ளது. இதில் கலியந்தாதி,

"முறைமுதல் வரினு மவ்வாவமுந் தாகிய
மிப்பரி சியன்ற முப்பது கட்டளை
மிக்கது கலியந் தாதி யாகும்"

(நூற்: 94)

என்று கூறுவதைக் காணலாம்.

இதில் கலியந்தாதி என்பது கலிப்பா வகையான கட்டளைக் கலித்துறை அதிகமாக ஆளப்படுபவதைக் காட்டுகின்றது.

சிவஞான போதமும் இதற்கான இலக்கணத்தைத் தெளிவாகக் கூறுகின்றனது. அவை,

"அவன் அவள் அதுவெனும் அவைமூ
வினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கிலேத் துளதாம்
அந்தம் ஆதி என்பனார் புலவர்" (நூற்:1)

என்று விளக்கிக் கூறுவதைக் காண்கிறோம்.

## அந்தாதியின் போக்கு

அந்தாதி இலக்கியமானது பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு வந்துள்ளது. காரைக்கால் அம்மையார் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் 'அற்புதத் திருவந்தாதி' என்னும் பாடலை எழுதினார். இவை வெண்பா யாப்பில் அமைந்திருந்தது. இதுவே முதலில் தோன்றிய அந்தாதி என்கின்றனர். பிற்காலத்தில் யாப்பின் ஆளுமையினால் பலரும் பல்வகையான யாப்பினைக் கையாண்டனர். கட்டளைக் கலித்துறை, விருத்தம், வெண்பா, கலிநிலைத்துறை, கொச்சகக் கலிப்பா போன்ற யாப்பு வடிவங்கள் பயன்படுத்தப்பட்டன.

திருமுறைகளில் அந்தாதி இலக்கிய வகைமை தனியாக வளர்ந்தது. பதினொராம் திருமுறையில் பல

நூல்கள் அந்தாதியாக அமைந்துள்ளதால் இதனை 'அந்தாதி மாலை' என்றும் அழைக்கப்படுவதைக் காண்கிறோம். திருவாசகத்தில் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், குழைபத்து போன்றவையும், திருமூலரின் திருமந்திரத்தில் சில பாடல்களிலும், திருஞான சம்பந்தரின் 'பிரமபுரத்துறை' என்று தொடங்கும் பதிகமும் இயமக அந்தாதியாக அமைந்துள்ளது.

காலப்போக்கில் அந்தாதியில் கடினமான யாப்பு வடிவங்கள் மேற்கொள்ளப்பட்டதால் பலராலும் படிக்க இயலா நிலையை உருவாக்கியது. புலமையைக் காட்ட அந்தாதியில் இயமகம், திரிபு, கட்டளைக் கலித்துறை, திரோட்டகம் போன்ற வடிவங்கள் கையாண்டனர். இதழ்கள் ஒட்டாமல் (ப,ம இல்லாமல்) பாடப்படும் அந்தாதிகள் இயற்றப்பட்டன. தமிழ் உலகிற்கு வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் பல அந்தாதி நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் சில பதிப்பிக்கப்பட்டு விட்டாலும் இன்னும் ஏராளமான சுவடிகள் பதிப்பிக்கப்படாமல் இருக்கின்றது. இதில் தண்டபாணி சுவாமிகளின் 'கலிவிடு அந்தாதி' என்னும் சுவடி பதிப்பிக்கப்படுகிறது. மேலும் எண்ணற்ற இலக்கியங்கள் சுவடியாக இருப்பதையும் காண முடிகின்றது. இதுவரையிலும் 900க்கும் மேற்பட்ட அந்தாதி இலக்கியங்கள் பதிப்பிக்கப் பட்டுள்ளன.

தெய்வமே துணை

# கலிவிடு அந்தாதி

## காப்புச் செய்யுள்

**கொச்சகக் கலிப்பா**

தென்குருகை வயிணவன்முன்
சிறைவிடந்தா திப்பனுவ
னன்குரைத்து னடியவர்தந்
நடுவிருக்கை நிசமாகின்
மென்குதலை யேன்சொல்கலி
விடந்தாதி வீண்போமோ
வென்குருவா கியமுருகா
யானைமுகற் கிளையோனே.

*******

# கலிவிடு அந்தாதி

## வைகுமெழில் வேலனே

### கலிநிலைத்துறை

கடல்சூழ முலகோரு மெனையுன்ற
ணாளென்று கழறச்செய்தாய்
இடர்நீடு மிடியாலி ளைத்தேனெ
னக்கேதி எப்பஞ்சொலாய்
உடலாதி யைத்தந்த போதொப்பு
நின்னெஞ்ச மொல்காததோ
வடபாவி முருகாவு னருளிப்ப
டிப்போன தநியாயமே 1

ஆயுந்த மிழ்ப்பாட லறையாத
சிலருக்கு மருள்செய்தநீ
பேயுந்தொ ணிச்சந்த மொழிவேனை
மிடியாலி ளைக்கச்செய்தாய்
தோயும்பு கழ்க்கீதோ ரழகென்று
ளாயோது றந்தோர்களைப்
பாயுந்த கர்க்கோர நெடுமாவி
லேறும்ப ரஞ்சோதியே 2

சோதிப்பெ னும்பொய்த்தொ ழிற்கொண்ட
னெஞ்சைத்து யர்ச்சாகரத்
தேதிக்கி லாமற்ற விக்கச்செய்
கின்றாயி தேற்றங்கொலோ
வாதிக்கு மூடர்க்கு நானொல்க
லாமோவ ரந்தந்திடாய்
காதித்தி னுந்தீயர் காணாத
ஞானக்க ழற்கந்தனே

3

கந்தக்க டம்பாதி யைப்போலு
மென்றன்க வின்பாடலை
யந்தத்தி னத்திற்பு கழ்ந்தோது
நின்வாய டைத்திட்டதோ
இந்தக்க லிப்பேயை வெல்லுந்தி
றன்சற்று மில்லாய்கொலோ
குந்தச்சி கிக்காவ வாகுன்ற
முற்றுங்கொ ளுந்தெய்வமே

4

தெய்வத்தை நம்பத்த காதென்று
பல்லோர்சி ரித்தேசவென்
மெய்வற்றி டக்கண்டி ருத்தாய்க
லிக்குன்கை வேலஞ்சுமோ
பொய்வக்க ணைச்சொற்பு கன்றாயி
துண்மைப்பு கழ்க்காணிகாண்
சைவக்கொ முந்தேயெ ழந்தாறு
ணர்த்துந்த னிச்சீலனே

5

சீலங்க ளில்லார்தெ ருத்தோறு
நாளுந்தி ரிந்தெய்த்துவீண்
காலங்க ழிக்கக்க லிப்பேய்வெ
ருட்டக் கனங்குன்றினேன்
வேலங்கை யோடின்றொ ராடற்செய்
தென்றுன்ப வேர்கெல்லிடாய்
மாலங்க ணல்குந்து ணைப்பேதை
மார்வெளவு மார்பத்தனே
6

பத்தர்க்கு ரங்குங்கு ணத்தைய
வென்னப்ப ராவுற்றநான்
இத்தத்து றக்கண்டி ருந்தாயெ
னைக்கிள்ளை யென்றிட்டதோர்
சத்தத்தி னாலெய்து றுஞ்சீர்மி
டிப்பேய்சு னக்கஞ்சலோ
சித்தர்க்கு முத்தர்க்கு மாதார
மாநின்ற செல்வேலனே
7

வேலாயு தத்தெய்வ மேமிக்க
தாமென்று மெச்சிக்கொளார்
போலாக மெய்த்துக்கி டக்கப்பு
ரிந்தாய்பொ ருட்சீலர்தம்
பாலாட லொன்றென்னி மித்தஞ்செய்
தானிற்ப ழிப்பெய்துமோ
வாலால முண்டார்நு தற்கண்ட
ரும்போல னாமையனே
8

ஐயம்பெ ருத்துத்த விக்கின்ற
நாயேன கத்துற்றுநீ
மெய்யன்ப ருக்கோது மாறோதி
புந்தீயர் வீடெங்கணும்
பெய்யந்த ரங்கத்த ரிற்போத
நீரப்பொ ருட்டந்திடாய்
வையஞ்சு மக்கும்பொ ருப்பெங்கு
நின்றாடும் வாழ்வாளனே 9

வாழ்வாயி ரத்துக்கு முயர்வான
மெஞ்ஞான வழியைத்தொடாத்
தாழ்வாள ரிற்செம்பொன் விழையுங்கொ
டுந்தீமை தழையச் செய்தா
யூழ்வாத னைத்தொந்த மெனினுந்த
விர்த்தாள வொண்ணாததோ
வேழ்வார முந்தன்ன வாமென்றி
னடுவைகு மெழில்வேலனே 10

## மறைச்சீர் விளைந்த வலியோனே

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

எழிலித் திரளைத் தருவினத்தை
ஈனர் கரங்கட் கிணையோதிக்
கழியக் கலிநோய் தனைவிட்டாய்
கவலைக் கடலி னிடைப்பட்டேன்
பொழிலிற் றிகழ்பன் மனைதோறும்
போய்நின் புகழே புகன்றுய்வாய்
விழியிற் பொழிபே ரருணல்காய்
விரைப்பூங் கடம்பு மிலைவோனே 11

மிலையா வேம்பு முடித்தினும்
வேடனு ருக்கொண் டவிர்ந்ததிலுங்
கலையா ளுமை யாயதிலுங்
கணியா நின்ற காட்சியிலுந்
தொலையா வறுமைக் கனல்வித்தென்
றெழும்பு கொளலோர் சுமையாமோ
மலையா றிரண்டிற் றிகழ்தோண்மேல்
வடிவே லணிந்த வானவனே 12

வானும் புவியு மதிக்குநலம்
வலிதிற் றருது மெனக்கூறித்
தேனும் அமிழ்து மனையகவித்
திரண்மிக் கணிந்துஞ் சிறியேனை
யூனு நுகருங் கொடியோர்பா
லுள்நொந் திரக்க விடலாமோ
கோனுங் குருவுங் கடவுளுமாங்
குமரா வமரர் குலக்கொழுந்தே

13

குலவு மதுரத் தமிழ்க்கவிதை
கொழிக்குந் திறமை கொடுத்துளநீ
யிலவிற் கடையாங் கயவரிடத்
திரந்து மறுக விடலாமோ
புலவர் பெருமா னெனுந்திருப்பேர்
பொய்யா யினதோ புகன்றருளாய்
கலகந் தவிர்ப்பான் மதுரைநகர்க்
கழகத் தமர்ந்த காண்முளையே

14

கானக் குறத்தி மணவாளா
கனக நகர்க்கோன் மகள்கணவா
ஞானக் குரவா வெனத்தினமு
நவிலச் சலியா நன்னாவு
மீனத் தொழிலோ ரிடமிருந்தா
லிளப்ப முனக்கே யெனல்விழையோ
வானத் தமர ரினம்பரவ
மயின்மீ தேறி மகிழ்வோனே

15

மகிழ நறும்பூந் தொடையலணி
மருமத் தொருவன் மகுடநிகர்
நகில மடவா ரினுங்கொடித
நவைசால் பசும்பொன் னணிவிரும்பி
அகிலத் தலைய விடலாமோ
அடிமை நினக்கே யல்லேனோ
முகில்முன் நடிக்கு மயிலூரு
முருகா திருமான் மருகோனே
16

மருவார் துளவத் தின்னபதமே
வணங்கு மொருவன் றனைவலிதன்
இருகால் விலங்கிட் டரியதயிழ்
ஏற்றா யெனக்கே னிரங்குகிலாய்
திருநீ றணியாப் புலைநெறியோர்
தெய்வத் தடையாற் றிகைத்தனையோ
முருகா வொருகா லனைத்தினும்வாழ்
முதனா னெனவு மொழிந்தனையே
17

மொழிந்த மொழிபோ னடந்திமகிழ்
முறையுன் னுளத்தி லுளதாகில்
இழிந்த மனத்துக் கயவரிட
மிரந்து திரிந்திங் கிளைப்பேனோ
பொழிந்த மதுரத் தமிழுணரும்
புலவர்க் கருளும் புகழீதோ
குழிந்த விழிமா ருதியொருபோ்
கொடுக்கப் புரிந்த குகவேளே
18

வேளைக் கருள்வா யெனத்துதித்து
விரும்புந் தமியேன் மிகமகிழ
நாளைக் கெனுஞ்சொற் பகர்ந்துநெடு
நாளா கியுமே னடத்திலையோ
தேளைப் பொருவு மிடிநோயைத்
தீர்த்தா யெனினுந் திகைத்தயரேன்
காளைப் பருவக் குமராநின்
கருணைப் பெருஞ்சீர் காண்பரிதே

19

காணங் கருதிப் பலவாயிற்
கடைதோ றலைந்து கலங்குதலா
னாணம் பெருத்தே னுனையதுதா
னுகா ததுவோ நாடொறுநின்
றோணம் பியவென் மனவீரந்
துலங்கா தொழியத் தருங்கொல்லோ
மாணம் புயந்தோன் றணைப்புடைத்து
மறைச்சீர் விளைத்த வலியோனே

20

# நின்மல மூர்த்தியே

## கலிவிருத்தம்

வலிய துன்ப வலைப்படக் காணுமென்
கலியை வெல்லுங் கடைக்கணில் லாய்கொலோ
புலிமுன் னாட்டிற் புலர்ந்தது போதுமொண்
குலிச னல்கிய குஞ்சரி பாகனே

21

பாக சாதன னாதிய பண்ணவர்
சோக நீக்குந் தொழின்மறந் திட்டதோ
ஆக மெய்த்த தறிந்திலை யோமயில்
வாக னத்தின் மருவுசிங் காரனே

22

கார ணத்தைக் கழறிய நின்னருள்
சீர ணப்படச் செய்பிழை யுள்ளதோ
நார ணன்றகை நல்கலிவ் வண்ணமோ
வார ணக்கொடி யேந்திய வள்ளலே

23

வள்ள லந்தகை மன்னிய நின்னுளந்
தள்ள ருங்கலி யைத்தரத் தக்கதோ
புள்ள லம்புக டம்பணி புண்ணியா
வெள்ள நீரவெ ணக்கரு ளீகையே

24

ஈகை நாடு மெனக்கு மிவ் வின்னறீர்த்
தோகை நல்கிய யுன்மன மென்னது
பாகை நேர்தமிழ்ப் பாவிழை கின்றதேன்
வாகை வேற்கை மலைப்பெருந் தெய்வமே
25

தெய்வ மன்ன சிலருமுன் செப்பிடா
மெய்வ ழக்கை விளம்பிடச் செய்தநீ
கைவ றக்குங் கலிசுடக் கண்டதேன்
சைவ நாதன் றழல்விழிப் பாலனே
26

பால றாத்தமிழ் வாயருட் பாவலன்
போல வாழும் புகழ்விழைந் துள்ளநா
னீல னாற்ற ரைச்செய னீதியோ
சூல பாணி தொழுங்குரு நாதனே
27

நாத னென்றுனை நம்பிலர் போலநான்
போத நொந்து புலம்பிட லாகுமோ
காதல் கொண்ட கருத்தறி யாய்கொலோ
சீத ளந்திகழ் செங்கடம் பாரனே
28

ஆர ணங்க ளறிந்தறி யாதநின்
சீர ணற்தந் தெரிந்தவர் சேருமோர்
பேர ணிந்தும் பெருங்கலிக் கெய்த்துளேன்
சூர னஞ்சத் துரந்ததிண் டோளனே
29

தோள னேகஞ் சுமந்தனை யேயெனை
யாள வல்ல தவற்றிலொன் றில்லையோ
மீள மீள மிகுங்கலிக் கென்செய்வேன்
நீள வேல்புனை நின்மல மூர்த்தியே 30

## கடவுளர்க்கு அருள் சேயே

**அறுசீர்தாழிசை**

மூர்த்தி யாயிரங் கோடியுண் டவற்றுள்வே ன்
முருகனே யுயர்வென்னுங்
கீர்த்தி வேட்டுனைக்கருதின னெனைத்தமிழ்க்
கிளியென மிகச்சொற்றாய்
வார்த்தி கக்குறி தோன்றியு நனவின்முன்
வந்திலை மயிலூருங்
கார்த்தி கேயனே வரிலெனைச் சூழ்கலி
கருக்கு மென் றஞ்சேலே 31

அஞ்ச நேர்நடைப் பாவையர்க் குருகலி
னாடக மயன்மீறிப்
பஞ்ச பாதகர் மனையினு மிரந்துழல்
பருவர லொழியென்னைக்
கெஞ்சல் கேட்டிலை யோசெவித் தொகைமிகக்
கிளர்ந்தன பழதேயோ
குஞ்ச ரானைக் கடவுளுக் கிளைவேற்
குருபரக் கோமானே 32

மானி யார்விடு முடங்கலில் வரைந்துள
வாசக மதித்தாயென்
பானி றத்தமிழ்ப் பனுவல்க ளனந்தமும்
பழுதென விகழ்வாயோ
நானி லத்தின ரறியவோ ரற்புத
நடத்திடா விதமியாதோ
வேனி லானுள நாணுறச் சிகிமிசை
விளங்கிய வேல்வேளே

33

வேளை யீதெனக் குறித்துமவ் வாறருள்
விளைந்திலாய் மிகநொந்தேன்
தாளை நல்கலு நிசங்கொலென் றையுறுந்
தமியன்மேற் றவறுண்டோ
கோளை வெவ்வலி யுனக்கிலை யென்பவர்
குழுவையு மதிக்கில்லேன்
வாளை நேர்விழிக் குறமகள் கவணெறி
மலர்க்கைதொட் டுவந்தோனே

34

வந்த டைந்தபே ராசைகள் அனைத்தையு
மறுத்திடா துளங்கொண்டு
கந்த நாயகன் றிருவரு டருமெனக்
கருதிமிக் கிறுமாப்பே
ணொந்த வேளைகண் டருள்செயா யாகின்முன்
னுவன்றமை பிழையாதோ
செந்த கைத்துவர்க் கிரியெனத் தொண்டர்தற்
திருவுளத் தமர்வானே

35

அமரர் காவல னாதியர் பெறலரும்
அநுபவ மளித்தாய்நின்
சமர வேற்படை பூசனை மறக்கிலன்
றமனிய மயலெய்திப்
பமர நேர்வழி யாரடித் தொழும்புசெய்
படிறரிற் றவிக்கின்றேன்
குமர தேசிக னேயருட் செயன்மிகக்
கொடுத்தருள் விரைந்தின்றே

36

இன்றி ராவிலொ ராடல்செய் குதுமென
வியம்பிய படிநண்ணி
னன்றி லாவிறி னான்செயற் பாலதெ
னவின்றுள பலமாற்றத்
தொன்றி தாகுமென் றுன்னலே யாயினு
முடலிளைத் துழன்றேன்காண்
வெற்றி வேற்படைக் குருபரர் வின்னமும்
வெருட்டுதன் முறையன்றே

37

அன்று தொட்டென துளத்துள்வந் துரைத்தவற்
றனந்தமெய் யாகாவாற்
றின்று சொற்றலை மதித்திடா விதமுணர்ந்
தியைந்தபே றுடையான்பாற்
சென்று கூறலும் பிழைபடி லென்செய்வேன்
றிருவுளக் குறிப்பேதோ
குன்று தோறுநின் றாடிய முருகனே
குறைபொறுத் தாள்வாயே

38

அருளை யேமதித் தலமருந் தமியனே
அகமல ரினுமம்பொற்
பொருளை நாடியும் புண்படத் தகுங்கலி
புணர்ந்திட செய்தாயோ
இருளை மாயையை வினையினைத் தணந்துவீட்
டிசைத்திட லெவ்வாறோ
குருளை நாய்க்கருள் சுரந்தமா முனிக்கருள்
குரவனா கியகோவே

39

கோவை வாயிதழ்ச் சிறுமியர் மயலினுங்
கொடியபொன் மருளெய்திப்
பாவை நல்கிமிக் கிரந்தனன் றிருவருள்
பழத்திலாய் பலமாந்தர்
நாவை யேசவுந் தூண்டினை யென்செய்வே
னலஞ்சிறி தருளின்னே
காவை யாண்டுவப் புறத்தகு பல்விழிக்
கடவுளர்க் கருள்சேயே

40

## வணிகனென்கை வழக்கின்பாற்றே

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

சேயமலர் முகமாறுந் திரணெடுந்தோ
ளீராறுஞ் செழும்பொற் பூவே
யாயதிரு வடியிரண்டு மவிர்தரமுற்
பிறப்பினும்வந் தாண்ட துண்டேல்
நீயறைந்த வண்ணமிந்நா ளிரவில்வி
ளையாடியரு ணிறைக்க வேண்டுங்
காயகநெஞ் சினருணராக் கந்தனே
மயிலூருங் கடவு ளானே

41

கடவுளர்பாற் பலர்க்குமொரு தலைவனா
கியபெருமை கவின்பப் பெற்றாய்
திடமிகுமெய் யடியவரைப் பலவாறு
சோதனைகள் செய்ய லாமோ
புடவியிற்பொய்ப் பொருள்வழங்கற் கித்தனை
பாடெனைப்படுத்தல் போமோ சொல்லாய்
நடனமயிற் பரியேறுங் குமரகுரு
பரமுருகா நலமீ தன்றே

42

அன்றுமலைக் குவட்டேறி யுருண்டதினத்
தெனைப்புரந்த தகிலந் தன்னிற்
பொன்றுதலிற் கொடிதாய மிடிநோயால்
வருத்தவென்றோ புகன்ற சொற்கள்
என்றுமெய்யா மெனக்கருதி யிடைந்துளமெய்த்
தொண்டரெவர் இருந்தார் சொல்லாய்
மன்றுடையார் களிகூர மறைமுடிவைப்
பகர்ந்தகனி வாயுள் ளானே

43

உள்ளபடி யுனைக்கருதி பலவாறு
பரிதவித்து முலகந் தன்னிற்
கள்ளவிழ்பூந் தொடையனிகர் கவிப்பனுவன்
மனிதருக்கே கழறு வாரு
மெள்ளமிடிக் கனற்சூடுண் டிடைகின்றே
னிவ்விளப்ப மெவர்க்கோ சொல்லாய்
துள்ளரிமா முகம்பலவுந் தோள்பலவு
மொருமொழியாற் றொலைந்த கோவே

44

கோவின்முற்றுங் குறிஞ்சியெனுங் குறிப்புணருந்
தமியேற்கிக் கொடுமை செய்வு
நீவிதிநூற் கடவுளரி லொருவனெனப்
பரவுநர்க்கு நினைவிற் றோன்றி
யாவியுய்யத் தக்கபர கதியளக்கை
நிசமாமென் றறைய லாமோ
காவுயுஞ்செச் சையுங்கடம்பும் புனைவானே
யாநிரண்டு கரந்தம் மானே

45

மானுதவு மகளிருந்த விதணருகி
லொருவேங்கை மரமாம் மைந்தா
யானுனக்கா ளானதுண்மை யெனைமிடியா
லிளைக்கவிட்டா யெனது பாடற்
றேனுனது செவியினுக்குக் கசப்பாமோ
நீரனன்று செப்பு மாறிங்
கூனுதிரங் கலந்துளபச் சரிசிபெய்யும்
புலைப்பூசை யுரைத்தி லேனே
46

உரைத்திடுதற் கரியபைம்பொற் செங்கலொரு
புலவனுக்கன் உதவும் பெம்மான்
பரைக்கருளு மிளமதலா யென்னளவு
நீகொடுமை பண்ண வேண்டாங்
கரைத்துருகு நெஞ்சமிலே னாயினுமென்
கவிச்சுவையைக் கைப்பென் பாயோ
விரைக்கமலர் தன்னெழுத்தை நின்றிருத்தா
ளழிக்குமென்கை விளக்கச் செய்யே
47

செய்யரிய பெருந்திருக்கூத் தனந்தம்விளை
யாடிநின்றாள் சேரும் பெட்பால்
வையகமும் வானகமும் மதிக்குநலங்
கருதிமிக வழுத்து மென்னைப்
பொய்யர்மொழி நம்பிமனம் புண்படப்பாழ்
மிடிக்கனலாற் புலர்ந்த லாமோ
பையரவின் மாயனெனப் பரதமிடும்
பசுந்தோகைப் பரியூர் வானே
48

வானாட்டுப் புத்தேளிர் மகிழ்கூர
மண்ணுலகின் வளங்கண் டிந்த
ஊனாரு முடலோடுன் றிருந்தாளுட்
கலக்குநலம் உன்னு மென்னை
மேனாளைக் கனல்போலு மிடிநோயாற்
றளரவிட்டு விடலாங் கொல்லோ
தேனார் தண் டமிழ்முனிக்கோர் பொருளுணர்த்துங்
குறியவிர்ந்த செங்கை யானே

49

செங்கையிற்பொன் னளியதமிழ்ச் சீரினுமே
லாயதென்றோ திகழ்வெண் பூவிற்
அங்கைமகிழ் கவிதைநலம் பெறக்கொடுத்து
மிடிநோயாற் றளரச் செய்தாய்
கொங்கைமருப் பாற்பொருமென் குஞ்சரத்துக்
கினியானே குரவ ரேனன்
மங்கைபுணர் மணவாளா வுனைப்புலவோர்
வணிகனென்கை வழக்கின் பாற்றே

50

## வெற்பினத்தொறு நின்றோனே

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

வழக்கினுக் கடங்கே னென்ன
மறுத்தனை யாயி னின்பால்
முழக்குபே ராண்மை யுள்ளார்
மூவுல கிடத்து மில்லை
உழக்கும்வெங் கலிப்பேய் நீத்துள்
உறுதிதந் தருள வேண்டுங்
கிழக்கெழும் பரிதி போலுங்
கிளிரொளிக் குமர வேளே

51

வேளினைச் சமனை நீத்து
விரிஞ்சனூர்க் கனுப்பா துன்பொற்
ஆளினிற் கலந்தா னென்னத்
தமிழ்கொடு துதித்த வென்னைக்
காளிருட் பிழம்பு போலுங்
கலியினாற் வேற்ற லாமோ
வாளிணைக் கருங்கட் கான
மறந்திகைம் மாத்தின் றோனே

52

மூத்திரைப் போதுன் பொற்றாள்
மறப்பினும் வருந்து நெஞ்சூட்
ஆத்திரக் கலிச்சூ டோர்பால்
அழாலனத் தழைய லாமோ
பாத்திர மல்லே னாகிற்
பலவிதம் பகர்ந்த தேனோ
தோத்திரக் கிளியைத் தோளிற்
சுமந்திடச் சலியா தானே

53

தானெனு நிலையி னின்று
தமிழ்கொடு துதிக்கு மென்னை
நானெனு மகங்கா ரத்தோர்
நகைப்பதுஞ் சகிக்கின் றாயே
ஏனெனக் கிரங்கு கில்லா
இசைத்தவா றியற்ற லென்றோ
மீனெனும் விழித்தா யான
வேல்புனை விளையாட் டானே

54

ஆட்டருந் தவத்தோ ருய்வான்
அமர்ந்துல கனைத்துஞ் சூழ்ந்தாய்
பாட்டவா விருத்த வண்ணம்
பசும்பொனே னுதவு கில்லாய்
கேட்டவா யலுத்த தந்தோ
கீழவ ரெனநா ணாம
நாட்டலைந் திரந்திட் டாலு
நல்குனர்த் தடுக்கின் றாயே

55

தடுத்தவா ளரவே யென்னத்
தமியனேன் றயங்கக் கண்டுந்
தொடுத்தபாட் டனந்தந் தோளிற்
சூடியுந் துயர்தீர்த் தில்லாய்
அடுத்தவர்க் கருளும் பான்மை
ஆயத்தனை போலு மந்தோ
படுத்தமான் மருகா விண்ணோர்
படைக்கொரு பதியாஞ் சேயே

56

ஆஞ்செயல் பலவு மொவ்வோர்
ஆருந்தமிழ்க் கவிதை கொண்டு
தாஞ்செய லுடையா ராண்மை
தருகவென் றிரந்த வென்னை
வேஞ்செயற் கலியால் வாட்டல்
விகிதமோ விலக்கி யாள்வாய்
சாஞ்செய லொழிந்தோர் போற்றுஞ்
சரவணந் தரவந் தோனே

57

வந்தியர்க் குலக மன்னர்
வழங்குபுன் மாழை தானு
நொந்திடுந் தகிகண் டீயு
நுண்ணிபை யில்லா நீயோ
மந்திர முடிவை நல்கி
வருபிறப் பொழிப்பா யந்தோ
இந்திரன் மருகா வேற்கை
இறையவா விரங்கு வாயே

58

வாயச மனைய கற்வர்
மாதவப் பயனென் றுள்ளந்
தீயபொன் விரும்பு லேனைத்
தினமதே நினையச் செய்தாய்
நீயருள் கருணை யீதோ
நிசம்பொய்போல் நிலவ லாமோ
மாயவன் விழிக ளீன்ற
மகளிரார் மருவும் வாழ்வே

59

வாழ்வெனக் கனந்த மீந்து
மாழையின் பிணக்க மென்னுந்
தாழ்வினை வருத்தி வீணே
தயங்குறக் கண்டா யந்தோ
ஏழ்வகைப் பவந்தீர்த் தாள்வாய்க்
இதுவுமோ ரியற்கை கொல்லோ
வீழ்வொருங் களிப்போ னாகி
வெற்பினத் தொறுநின் றோனே

60

## மறுமுகத் தமுதே

### கட்டளைக் கலித்துறை

நின்ற தாவரத் தினைக்கொலை செய்தலு நெறியின்
றென்ற ஞானமிகக் கீந்தனை யீனரு மெய்தும்
பொன்ற ராவிதம் யாதெனக் கேனதுன் பொய்மை
நன்ற தென்றிடப் புரிந்தது வள்ளிநா யகனே
61

நாயை நேர்மனக் கடையனேற் கந்தனை நவின்ற
நீயை யோமிடிக் கனலிடை வெதுப்புத நெறியோ
தீயை யேந்திய சிவபிரான் மணங்கவர் தெய்வத்
தாயை வேற்படை யாக்கிய சண்முகத் தரடே
62

அரச ராதியர்க் கஞ்சுபு நாணுறு மடியே
இரச தக்கடன் றீர் தரற் காம்வித மியற்றாய்
முரச கேதனன் றூதனில் வாழ்நல மொழிந்தியான்
பரசல் கேட்டுள பன்னிரு காதுடைப் பரனே
63

பரவை வாழ்மனைத் தூதர்கண் ணீன்றநின் பான்மைக்
கிரவி லென்கலி தீர்தரு நிமிர்த்தமோ ரேமத்
துரமு ளானுளத் தொளிர்தரி னிழிவுறா துண்மைச்
சரவ ணோற்பவ விதுபலர்க் கியற்றிட றானே
64

தான மால்கரிக் கஞ்சிய நாளையிற் றடுத்தாண்ட
ஈன வெங்கலிக் காட்படச் செய்தலு மியல்போ
மான முங்கொடைப் பெருக்கமுந் தணந்திடல்வழக்கோ
கான வேட்டுவக் கன்னியை மணந்தகா முகனே

65

முகம னோதிய சிலர்க்குநல் வாழ்வருண் முறைபோய்ச்
சகள நிட்கள மிரண்டுநீ யெனத்தெளி தகையேன்
அகநொந் தேங்கிட மிடியினாற் படுத்தலு மறமோ
விகட மால்கரி முகவனுக் கிளையவித் தகனே

66

வித்தை யிற்சிறி தருளவும் வெருளுநீ மிடிநோய்த்
தத்தை நல்கிடத் துணிந்தவா றென்கொலோ சாற்றாய்
அத்தை யீதலிற் கயமைபா ராட்டிலா யிந்தோ
முத்தை யாமறை நான்கினு முடிந்ததோர் முடிவே

67

முடிவில் பாழ்மிடிச் சாகரந் தன்னிடை மூழ்கிப்
படியின் மாய்பவர் தமக்குநின் னடியிணை பரவு
மடிமை யென்னுமோர் திருப்பெய ரமையுமோ வறையாய்
வடிகொள் வேற்படை வயவனாஞ் சுப்பிர மணியே

68

மணிகு லாவிய மயிற்பரி யுகைத்தடல் வடிவேல்
அணியும் வாழ்வையுந் தரவலா யென்றுனையடுத்தேன்
பிணியின் மூத்தவெங் கலியையும் பெயர்த்திலாய்
பிறக்கும்
பணில வார்செவி யார்விழி தருகுரு பரனே

69

குருவுந் தெய்வமு நீயல திலையெனக் குறிக்கும்
பருவ மெய்தியும் பாழ்மிடிக் கஞ்சுறுப் படுமோ
நிருபர் போற்றுற நிலத்தினும் புகழுட னிறுவா
யருவ வாதிக ளறிவரு மறுமுகத் தமுதே

70

## விமலர்விழி உதவ வரும் விந்தையானே

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

அமுதுமுதற் சிற்றுண்டி யினமு நீத்திட
ஆன்பாலென் றொருபெயர்கொ ளறலே மாந்திக்
குமுதமல ரனையநின்வாய் மொழியா லுய்யக்
குறித்திளைத்தேன் மிடிநோயாற் குலைய லாமோ
சமுசயந்தீர் தரப்பலவா றுரைத்த சொல்லுந்
தவறினாலென் என்செய்வேன் றாலி சூழங்
கமுகனைய மிடற்றிருவர் பாகா வேற்கைக்
கடவுளே யொருசிறிது கருணை செய்யே

71

கருணைமலி தருகடவு ணீயே யென்னக்
கருதிவிழி படுமெனது கனவிற் றோன்றிய்
அருணகிரிக் கிளிப்புலவ னீயே யென்ன
ஆயிரம்போ துரைத்தனையே யதுமெய் யாயின்
மருண்மலிபாழ்மனத்தோர்க்கு மெளிதாம் பைம்பொன்
வாதனையா லிந்தவண்ணம் வருத்த லாமோ
தருணமறிந் துதவிசெய்ய வல்லா யன்றோ
சரவணோற் பவமுருகா தயைசெய் வாயே

72

செய்யவள்கோ னெனப்புவியில் வாழ வைத்துச்
சிவைகேள்வ னெனக்கனஞ் சேரச் செய்வேன்
ஐயமுறே லென்றுரைக்க வீர வாகை
அனுப்பியது மறந்தனையோ வடிய னேனைப்
பொய்யனெனப் பலரிகழப் பொருள்வேட் டுள்ளார்
போலலைய விடலாமோ பொறுக்கின் றில்லை
நெய்யருவிக் கடம்பொடுகூ தளமுஞ் சூடி
நீலமயிற் பிரியேறு நிமல வேளே

73

நிலமபரம் பரைக்கடவு ளினங்கட் கெல்லா
நிறைமதுரத் தமிழ்க்கிரங்கு நேய முண்டென்
அமலனடி யார்முதலோர் மொழியாற் றேறி
அதைவிதிர்தோன் குருவாநின் னடிக்கா ளானேன்
கமலமக ளுறவைநம்பு மூடர் வாயிற்
கடைதோறும் பொருளிரந்துங் கலங்க லாமோ
முமலமறக் களைந்திடுமா றெழுத்துஞ் சொல்வார்
முன்னியவர் விளையாடு முருக வேளே

74

முருகவிழ்பூந் துணர்மலிகற் பகப்பொன் னாட்டு
முனிவினவ முதல்வீரன் மொழியா லொப்ப
வொருகனவின் முக்காலு முரைத்த மாற்ற
முலகறியா தெனினுமென்னெஞ்சுணர்ந்த தன்றோ
வருகணவு நனவுமொன்றென்றொருமெய்த் தாண்டன்
மனங்குளிரப் பகர்ந்ததனை மறந்திட் டாயோ
பொருகலிநோ யறக்களையும் வலியில் லாயோ
புரந்தரனுக் கரசளித்த புனித வேளே

75

புனிதநறுந் தமிழ்மணக்கு நெஞ்சத் தோறும்
பொல்லாவெங்கலிக்கொடுநோய்புகுதாவண்ணம்
இனிதகிலத் தாடுநலம் விருப்பு மென்னை
இரந்தலைய விடலாமோ இறைச்சி யுண்ணு
மனிதவுருக் குறையெழுதும் பொருளா லிந்த
வாறுவருத் திடவுனது மனம்வெட் காதோ
தொனிதருசெந் தகரேறிப் புவனி யெங்குஞ்
சூர்வானே யாறிரண்டு தோள்வல் லானே
76

வல்லவர்சொன் னூன்முழதும் வியந்து கூறும்
வைராகத் தாற்பலபேர் மாளக் கண்டும்
புல்லறிவாண் மையிற்பெரியார் தமக்கு மெய்தும்
பொருணசையாற்கொடுவிரதம்பூண்டுநின்றேன்
சொல்லனந்தத் தொன்றுதிச மாகக் காட்டித்
துயர்மலிபாழ்வறுமையிணைத் தொலைத்தின்றாள்வாய்
எல்லவர்பன் னிருவரையு முருக்கிச் செய்தாங்
இலங்கெழில்வேற் படைதாங்கு மீடுள் ளானே
77

உள்ளமொத்துக் கருதிடினு மறந்திட் டாலு
முனதருளுண் டெனமகிழ முறுதி நல்கிக்
கள்ளரெனப் பரதவிக்கப் பொருட்பேய் தன்னைக்
கடனுருவ மாவிடுத்துக் கலக்க லாமோ
பற்றவயிற் றிருச்செந்திற் பதியிற் சொன்ன
பலமொழியும் பிழைபிடிலெப் படியீண் டுய்வேன்
தெள்ளமுத மனையதிருப் புகழ்கேட் பானே
திருகியகார் மருப்பாடூர் திறற்றோ ளானே
78

தோளிலாணி கிளியெனவென் றனைப்பல் காலுஞ்
சொல்லியதுன் னுணர்ச்சிகொண் டோசுரபானஞ்செய்
வாளிணைக்கண் ணன்னைகுணங் கொண்டோபித்தன்
மகனான குணங்கொண்டோ வகுத்துச் சொல்லாய்
நாளிகத்திற் பொருள்வினையாற் கழிக்கச் செய்த
நலங்கொல்லோ நீயறியா ஞான முண்டோ
பாளிதமெள் ளுண்டைபொரி கடலை யாதி
பருகுகளிற் றுடன்பிறந்த பவளக் குன்றே
79

குன்றிடத்திற் கிணறமைக்கச் சொல்லிப் பொல்லாக்
கொடுங்கடனும் வட்டியுமேற் கொள்ளச் செய்து
தின்றிடலுண் டிடற்றணந்த விரதத் தாக்கிச்
செட்டிகளுற் பொருள்விழுந்துதியங்கக்கண்டாய்
என்றினியென் றனைநேர்வெங் கலியை மாற்றி
இவ்வுலகுன் னடிமையென வியம்பக் கேட்பாய்
வென்றிற்கொண் டடித்தாற்குங் கணையொன நீந்த
விமலர்விழி யுதவவரும் விந்தை யானே
80

## சூர்வெருளும் வேல் வீரனே

### கலிவிருத்தம்

விந்தமால் வரையைமுன் வெகுள்கரத் தொருதவன்
முந்தனைக் கினியபொற் றிருவடிக் குமரனே
இந்தவெங் கலியினா லெனைவருத் திடுதனின்
செந்தகைப் புகழ்பெறுஞ் சிறுமையென் றுணர்தியே
81

உணர்வறும் புலையர்கை யுடைமைநத் துறுமெனக்
கணவறும் புகழளித் தருள்வதென் றறைகுவாய்
கணபணந் தலைவடங் கமடமென் பிதழியார்
மணமுகந் தவள்கைமேன் மகிழிளம் புதழ்வனே
82

புதனின்மிக் குயர்தமிழ்ப் புலவர் பற் பலர்தினத்
திதமுறைப் பதுகுறித் தெனைவெறுத் தனைகொலோ
திதலைமொய்த் தவிர்முலைச் சிறுமியைப் புனமதிற்
சதமெனப் பணிதொழிற் றகுபுகழ்க் குழகனே
83

குழல்வளம் பொலிகருங் குயில்பொருங் குறமினான்
மழலையம் புதல்வனோ் மகிமைபெற் றுளவெனைப்
பழவினைக் கலிபொரிற் பழதுனக் கிலைகொலோ
வழகனந் தமுமொருங் கடையிளங் குமரனே
84

குமரனங் கடவுளென் றுருகுமெய்க் கொள்கையோர்
தம்ரெனக் கருதுநற் றகையளித் திட்டபின்
சமரவன் கலியினிற் றளரவிட் டனையையோ
வமரர்வென் களிறெடுத் தவளுளத் தனகனே 85

அனகமுத் தமிழ்நயத் தருமைமிக் கருளுநீ
கனகமுற் றுயர்மனைக் கடைகளிற் றிரியவிட்
டெனதுடற் றளரவைத் திடலறத் தியல்பதோ
தனதனுக் கினியர்நற் றனையரிற் சிறுவனே 86

சிறுவளிக் குன்றுடைச் செந்தமிழ்க் காவலன்
பெறுநலந் தருகெனப் பேணுமென் றன்னைநீ
றுகண்வெங் கலியினிற் றளரவிட் டிடலெனோ
றுமுகக் கமலமா மருணெறித் தலைவனே 87

லைமைபெற் றுள்ளநின் றன்னையே நம்புமென்
லைவறக் கலியொழித் துண்மைதந் தாள்வையோ
லைவலிக் கானவச் சிறுமியைத் தேடியன்
லைமுந் சாகனென் பாருளத் தையனே 88

யமற் றுன்னையே யநுதினம் பரவுமென்
சய்யசொற்றொடைகணின்றிருவருட் கயல்சொலோ
பாய்யிரிற் கலியிடைப் புலரவிட் டனையையோ
கயயிற் படையினைக் கருதுநர்க் கெளியனே 89

எளிதெனக் கருள்செய்தா லிழிவுனக் கெய்துமோ
களியிறக் கலியினைக் கதுவவிட் டனையருட்
டெளிவிலே னெனினுநின் செயலைநம் பிடல்பொயோ
வெளிமுகட் டளவுசூர் வெருளும்வேல் வீரனே
90

## கருணை மாக்கடலே

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

வீர ரியாவரும் போற்றிடத் தகுங்கூர்
வேல ணிந்தநின் விறற்பெரும் புயங்கள்
சார முத்தமிழ்த் தொடையிடுந் தமியேன்
றனது பாழ்மிடி தனைவெலா தனவோ
வீர முன்னுளத் தெள்ள வேனு
மில்லை யோவுனக் கிதுமுறை தானோ
பூர வாகனத் திவரும்வெண் கொடியும்
போற்றும் வீறுடைப் புலமைசால் குகனே
91

சால வித்தைசெய் மனிதரி லொருவன்
றானு நல்கிடத் தகுநலம் விழைந்தேன்
கால தாமதஞ் செய்திடத் துணிந்தாய்
கவிதை யீனர்கைக் காசினு மெளிதோ
பால னென்றெனைத் தழுவலும் பொய்யோ
பரம லோபநின் பாங்கினுக் காமோ
நீல மாமயிற் பரிமிசை யேறி
நெடிய வேல்கொடு நிலவுசே வகனே
92

சேவி லேறுநின் றாதையோர் புலவன்
சிந்தை யின்புறச் செம்பொன்மிக் கீந்தான்
ஆவி னாலடி யேன்பகர் பாடன்
அலமி லாதன வெனநவில் வாயோ
வாவி யோடுட விளைத்தது கண்டு
மருள்சை யாதுற லறமெனத் தகுமோ
பாவி நான்முகன் றலையொரு நான்கும்
பதற மோதுகைப் பவளவான் குருந்தே

93

குருந்த மாமணிக் குன்றுறழ் மேனிக்
குமர நின்றிருக் கோலமே கருதி
இருந்த வஞ்சினும் பொருண்மயல் வந்தால்
என்செய் வேனெனக் கேனது நீயோர்
திருந்து கற்கிண றமையெனச் சொல்லித்
தியக்க மீந்தனை சிந்தைமிக் கயர்ந்ததேன்
பொருந்து மாடலொன் றிக்கணம் விளைத்துப்
புவியும் வானமும் போற்றிடப் புரியே

94

புரிமுந் நூலுடைப் பனவருந் தவரும்
புலைய ராள்கையிற் புலர்வது சகியா
தரியா நின்றிருப் புகழ்சொலத் தொடுத்தேன்
அறிவி லார்பொருட் கலமரக் கண்டாய்
பெரிய சீரருட் பயனிது தானோ
பெற்ற றூர்பவர் பெருந்தவம் பேறே
விரியு மாயிரங் கட்பசுந் தோகை
விகிர்த னேகலி விடவிலக் குதியே

95

குதிக்கும் பேரொலித் தகர்வரப் பயந்து
கூவு நாரத னாதியோர்க் கருளி
விதிக்கு நான்முகற் புடைத்தகைக் குகனே
வேளை யீதறி மெத்தவு மெலிந்தேன்
மதிக்கு ணீயிலை யென்றிட லாமோ
மதிக்கு ணீயிலை யென்றிட லாமோ
வருத்த மித்தனை வைத்திடத் தகுமோ
சதிக்கு மாயிரஞ் சனிவளைந் தரங்கு
தவிக்கின் றேன்கலி தவிர்த்தருள் விரைந்தே
96

விரைகொள் பூம்பொழின் மலிதிருக் குருகூர்
வேதி யின்சிறை விடத்துதித் திருநாள்
கரையில் பேரருட் செயலினை யெளிதிற்
காட்டி யாண்டனை கலிவிடத் தமியேன்
உரைசெய் கின்றவிப் பனுவல்கேட் டிலையோ
ஓர வஞ்சக முன்றனக் காமோ
பரைதன் பானுகர் பாற்குணந் தமமோ
பகர்தி யாறுசெம் பவளவா யினனே
97

வாயி னாலொரு தமிழ்ப்பழங் கவியும்
வழத்தி டார்களும் வாழ்வுறச் சிலர்பாற்
போயி னானென தாளெனப் பகர்ந்தும்
பொருள ளித்துமெய்ப் புகழ்மிகப் புனைந்த
நீயி னாள்வரை யெனைத்துயர்ப் படுத்தி
நெருப்பில் வீழ்புழு நேர்படக் கண்பாய்
பேயி னாற்சிறை படுமவன் வாழ்வான்
பிறங்கல் கீண்றசீர் பிறங்கலான் டருளே
98

ஆண்ட நின்செய் லறிதர முயவா
தவல வெங்கலிக் காட்படன் முறையோ
கூண்ட மெய்யடி யவர்நடுக் குலவுங்
கொள்கை யாதிய கொற்றமத் தனையும்
வேண்டல் கண்டிலை யோவுனை யன்றி
வேறு தெய்வமு மெய்வழிக் காணேன்
ஆண்ட வன்றிரு மான்முதற் பலருந்
தனைய பாலிலாத் தகைபகர் குகனே

99

பகரொ ணாதநின் றிருவருட் பயனே
பயனென் றோர்கிலாப் பழறிற் றமியேன்
இகரில் வெங்கலிப் பிணியிடை தளர்ந்தேன்
ஈக்கி மெய்யற நெறியறித் தாள்வாய்
திகழும் வேற்படைப் பூசணை வீணோ
திருக்க ணாலொரு சிறிதெனைப் பாராய்
ககன வாணர்தஞ் சேனையி னதியா
சுழிக்கொ ணாப்பெருங் கருணைமா கடலே

100

## நேரிசை வெண்பா

கந்த னருளாற் கலிவிடந்தாதிப்பனுவற்
செந்தமிழைப் போற்றுந் திறந்தோருக் - கெந்தவிதச்
செல்வமுமுண் டாகுந் திருக்கொழிந்த மெய்வீட்டு
ளெல்வழிபோம் பேறுமெய் துமே.

# செய்யுள் முதற் குறிப்பகராதி


| எண் | பாடல் எண் |
|---|---|
| அஞ்ச நேர்நடை | 32 |
| அமரர் காவலனாதியர் | 36 |
| அமுதுமுதற் சிற்றுண்டி | 71 |
| அரச ராதியார் | 63 |
| அருளையே மதித்தல் | 39 |
| அன்று தொட்டென் | 38 |
| அன்று மலைக் குவட்டேறி | 43 |
| அனகமுத் தமிழ் நயம் | 86 |
| ஆஞ்செயல் பலவும் | 57 |
| ஆட்டருந் தவத்தே | 55 |
| ஆண்ட நின்செயல் | 99 |
| ஆயுந்தமிழ் பாடல் | 2 |
| ஆரணங்களறிந்து | 29 |
| இன்றிராவி | 37 |
| ஈகை நாடு | 25 |
| உணர்வறும் புலையர்கை | 82 |
| உரைத் திடுதற் கரியபைம்பொன் | 47 |
| உள்ளபடி யுனைக்கருதி | 44 |
| உள்ளமொத்துக் கருதிடினும் | 78 |

| | |
|---|---|
| ஏழிலித் திரளை | 11 |
| எளிதெனக் கருள்செய் | 90 |
| ஐயம் பெருத்துத்த | 9 |
| ஐயமற்றுன்னையே | 89 |
| கடல்சூழ முலகோரு | 1 |
| கடவுளர்பாற் பலர்க்கு | 42 |
| கந்தக்க டம்பாதி | 4 |
| கருணமலி தருகடவுண் | 72 |
| காணங் கருதி | 20 |
| காரணத்தை கழறிய | 23 |
| கானக் குறத்தி | 15 |
| குதிக்கம் பேரொலி | 96 |
| குமரனங் கடவுளென்று | 85 |
| குருந்தமாமணிக் குன்றுறழ் | 94 |
| குருவுந் தெய்வமும் | 70 |
| குலவு மதுரத்தமிழ் | 14 |
| குழல்வளம் பொலிகரு | 84 |
| குன்றிடத்திற் கிணறமைக்க | 80 |
| கோவின்முற்றங் குறிஞ்சி | 45 |
| கோவை வாயிதழ் | 40 |
| சால வித்தைசெய் | 92 |

| | |
|---|---|
| சிறுவளிக் குன்றுடை | 87 |
| சீலங்களில்லார் தெரு | 6 |
| செங்கையிற் கொன்டாய் | 50 |
| செய்யரிய பெருந்திரு | 48 |
| செய்யாள் கோனென | 73 |
| சேயமலர் முகமாறு | 41 |
| சேவிலேறு நின்றாதையோர் | 93 |
| சோதிப் பெனும் | 3 |
| தடுத்த வாளரவே | 56 |
| தலைமை பெற்றுள்ள | 88 |
| தான மால்கரி | 65 |
| தானெனு நிலையினின்று | 54 |
| தெய்வ மன்ன | 26 |
| தெய்வத்தை நம்பத்தகா | 5 |
| தோளனேகஞ் சுமந்தனை | 30 |
| தோளிலணி கிளியென | 79 |
| நாதனென்றுனை | 28 |
| நாயை நேர்மன | 62 |
| நிமலபரம் பரைக்கடவுள் | 74 |
| நின்ற தாவரத்தினை | 61 |
| பகரொணாத நின்றி | 100 |

| | |
|---|---|
| பத்தர்க் கிரங்கு | 7 |
| பாக சாதனன் | 22 |
| பாலறாத்தமிழ் | 27 |
| பாவை வாழ்மனை | 64 |
| புதனின் மிக்குயா் | 83 |
| புரிமுந் நூலுடை | 95 |
| புனித நருந்தமிழ் | 76 |
| மகிழ நறும்பூ | 16 |
| மசும னோதிய | 66 |
| மணிகுலாவிய | 69 |
| மருவார் துளவ | 17 |
| மாத்திரைப் போதுன் | 53 |
| மானியார் விடுமுடங்கல் | 33 |
| மானுதவு மகளிருந்த | 46 |
| மிலையா வேம்பு | 12 |
| முடிவில் பாழ்மிடி | 68 |
| முருகவிழ் பூந்துணர் | 75 |
| மூர்த்தியா யரங்கோடி | 31 |
| மொழிக்க மொழி | 18 |
| வந்தடைந்த பேராசை | 35 |
| வந்தியர்க் குலமன்னர் | 58 |

| | |
|---|---|
| வல்லவர் சொன்னூன் | 77 |
| வலிய துன்பவலை | 21 |
| வழக்கினுக் கடங்கே | 51 |
| வள்ளலந் தகை | 24 |
| வாயச மனைய | 59 |
| வாயினாலொரு தமிழ் | 98 |
| வாழ்வாயி ரத்துக்க | 10 |
| வாழ்வெனக் கனத்த | 60 |
| வானாட்டுப் புந்தேளிர் | 49 |
| வானும் புவியும் | 13 |
| விரைகொள் பூம்பொழின் | 97 |
| விந்தமால் வரையைமுன் | 81 |
| விந்தையிற் சிறிதருள் | 67 |
| வீரரியா-வரும் | 91 |
| வேலாயுதத் தெய்வமே | 8 |
| வேளினைச் சமனை | 52 |
| வேளைக் கருள்வாய் | 19 |
| வேளையீதெனக் குறித்து | 34 |

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| அகிலம் | - | உலகம் |
| அமரர் | - | வானோர் |
| அமலனடி | - | சிவனுடைய பாதம் |
| அனகம் | - | கடவுள் |
| அலமிலாதன் | - | அழிவில்லாதவன் |
| ஆரணன் | - | சிவன் |
| ஆவிலொராடல் | - | ஆன்மாவோடு நடனம் புரிபவன் |
| இகரம் | - | சந்தம் |
| இந்தக் கலிபேய் | - | வருத்துகின்ற வறுமை |
| இறுமாப்பு | - | அகந்தை |
| ஊழ்வாதம் | - | பழவினை தருக்கம் |
| ககணம் | - | ஆகாயம் |
| கஞ்சன் | - | கண்ணன் |
| கமடம் | - | ஆமை |
| கமடத்திரு | - | சீவதாரு |
| கமலமகள் | - | தாமரையில் அமர்ந்தவள் |
| கயமை | - | குணவீனம் |
| கயல் | - | கெண்டை மீன் |
| கலமரம் | - | மரத்தால் கதவு |

| | | |
|---|---|---|
| கலிநோய் | - | வறுமையின் துன்பம் |
| காயகம் | - | மருட்டுவித்தை |
| கார்த்திகேயன் | - | கார்த்திகை பெண்களின் மகன் |
| காவி | - | மிதப்பு |
| கிழக்கெழும்பரிதி | - | கிழக்கு எழும் சூரியன் |
| குஞ்சரம் | - | கருங்குவளை |
| குஞ்சரானை | - | அஞ்சனை தந்தை |
| குஞ்சரி பாகன் | - | பெண்யானையின் தலைவன் |
| குமுத மலர் | - | வெள்ளி மலர் |
| குரவன் | - | மூத்தோர் |
| குருபரக் கோமான் | - | பரமகுருவின் மைந்தன் |
| குருளை நாய்க்கருள் | - | குட்டி நாய்க்கு அருந்தல் |
| குலி | - | யாக்கை |
| குவட்டேறி | - | மலைமீதேறி |
| குறமகள் கவணெறி | - | வள்ளியை கவர கவண் எறிந்தவன் |
| கூனு | - | வளைதல் |
| கொடுவிரதம் | - | கடுந்தவம் |
| கோளை | - | எலி |
| சகியா | - | சகித்துக் கொள்ளாத |

| | |
|---|---|
| சமரவன் | - எதிரானவன் |
| சமர வேற்படை | - பகைவரை வெல்லும் படைக் கருவி |
| சாகரம் | - கடல் |
| சிற்றுண்டி | - பொறிக்கறி |
| சீதனம் | - குளிர்ச்சி |
| சீர்மிடிப்பேய் | - வறுமையில் வாட்டும் பேய் |
| சீலங்களில்லார் | - ஒழுக்கமில்லாதவர் |
| சூர்வெருளும் வேல் | - பகை வெல்லும் வேல் |
| சூலபாணி | - சூலத்தை ஏந்தியவன் |
| சூழ்கலி | - வாட்டும் வறுமை |
| செங்கையான் | - சிவந்தகையுடையோன் |
| செந்திற்பதி | - முருகன் பதிகொண்ட இடம் |
| சேயமலர் | - வெற்றியைத் தரும் மலர் |
| சேவகன் | - ஊழியன் |
| சைவக் கொழுந்து | - சைவத்தை துளிர்க்க செய்பவன் |
| ஞானக் குரவார் | - சைவப் பெரியோர் |
| தத்தை | - ஜம்பனின் மகள் |
| தமியன் | - சகோதரன் |

| | | |
|---|---|---|
| தாளை | - | பாதம் |
| திணைக்கொலை | - | முற்றிய கதிர் |
| துள்ளரிமாமுகம் | - | துள்ளும் சிங்க முகம் |
| துளவ | - | வாடுதல் |
| தோத்தரக் கிளி | - | வழிபடும் கிளி |
| நானிலம் | - | நால்வகை நிலம் |
| நிமலபரம் | - | குற்றமற்ற உள்ளம் |
| நிருபர் | - | உருவமற்றவர் |
| நெடுமால் | - | திருமால் |
| பகர் | - | பாழை |
| பஞ்சபாதகர் | - | பாவத்தை புரிந்தோர் |
| பண்ணவர் | - | கடவுள் |
| பதியர்ஞ்சேயே | - | சிவனின் மைந்தனே |
| பரசம் | - | ஓரிரத்தினம் |
| பிரமலோபன் | - | மேலுலகை ஆள்பவன் |
| பரவை | - | கடல் |
| பரை | - | பார்வதி |
| பனுவன் | - | புலமையாளன் |
| பாவலன் | - | கவிஞன் |
| பாழ்மிடி | - | அழியக் கூடிய வறுமை |
| பானிதம் | - | உணவு |
| பிணக்கம் | - | பிணங்கல் |

| | | |
|---|---|---|
| பித்தன் | - | சிவபெருமான் |
| பிழம்பு | - | திரட்சி |
| பிறங்கல் | - | பெருமை |
| பிறங்கலான் | - | பிரகாசித்தல் |
| புலிங்கம் | - | ஒருகூத்து |
| புரந்தரம் | - | தோள் |
| புலைநெறி | - | கீழான வழி |
| புலைப்பூசை | - | கீழான வழிபாடு |
| புலையிர்கை | - | கீழானவர் கை |
| பூங்கடம்பு | - | பூக்களைவுடைய கடம்ப மரம் |
| பூரவாகயும் | - | மயில் வாகனம் |
| பெருங்கலி | - | முற்றிய வறுமை |
| பையரவம் | - | நச்சுப் பாம்பு |
| மடிமை | - | சோம்பு |
| மருகா | - | முருகனைக் குறிப்பது |
| மருள்சை | - | அருள் செய் (திரிபு) |
| மாணம் | - | மாட்சிமை |
| மாய்பவர் | - | இறந்துபட்டவர் |
| மாயவன் | - | திருமால் |
| மாழை | - | அழகு |
| மானி | - | மானமுடையோன் |
| மிடியாலி | - | வறுமை மிகுதி |

| | | |
|---|---|---|
| முத்தர் | - | முத்திக்குரியோர் |
| முத்தை | - | கவனம் |
| முந்தன் | - | மூத்தோன் |
| முரசகேதனன் | - | தருமன் |
| மெச்சிக்கொளார் | - | துதித்க் கொள்ளாதவர் |
| வணிகரென்கை | - | துலாராவினை வுடையவன் |
| வந்தியர் | - | மங்கலம் |
| வாட்டல் | - | மெலிவித்தல் |
| வார்த்திகம் | - | கிழத்தன்மை |
| வாரணக்கொடி | - | கோழிக்கொடி |
| வாளை | - | ஒருவகை மீன் |
| விகடமால்கரி | - | அழகிய உருவம் உடையோன் |
| விகிர்தம் | - | நோய் |
| விரிஞ்சன் | - | பிரமன் |
| விந்தை | - | ஞானம் |
| விமலர்விழி | - | சிவபெருமானின் விழி |
| வரைக்கமலர் | - | வாசனை மிக்க தாமரை |
| வெண்கொடி | - | சேவல்கொடி |
| வெருட்டுதல் | - | பெருட்டல் |
| வேற்கை | - | வேலினை உடைய கை |

## முருகனைச் சிறப்பிக்கும் பெயர்கள்

யானை முகற் கிளையோன்
நெடுமாவி லேறும்ப ரஞ்சோதி
ஞானக்க ழற்கந்தன்
குன்ற முற்றுங்கொ ளுந்தெய்வம்
சைவக் கொழுந்து
பேதைமார்வெளவு மார்
ஆதாரமாய் நின்ற செவ்வேலன்
நின்றாடும் வாழ்வாளன்
வைகுமெழில் வேலன்
பூங்கடம்பூ மலையோன்
வடிவேலணிந்த வானவன்
அமரர் குலக்கொழுந்து
மதுரைநகர்க் கழத்தமைந்த கான்முளை
மயில்மீதேறி மகிழ்வோன்
திருமால் மருகோன்
கொடுக்கப் புரிந்த குகவேல்
மறைச்சீர் விளைந்த வலியோன்
குஞ்சர காகன்
மருவு சிங்காரன்
வாரணக்கொடியேந்திய வள்ளல்
அம்பு கடம்பணி புண்ணியன்
மலை பெருந்தெய்வம்
அழல்விழிப் பாலன்

சூலபாணி தொழிங்குரு நாதன்
சீதளந் திகழ் செங்கடன் பாதன்
சூர னஞ்சத் துரத்தின் திண்டோளன்
நின்மல மூர்த்தி
காத்திகேயன்
குருபரக் கோமான்
நாணுறச் சிகிமிசை வேல்வேள்
குறமகள் கவநெறிந்தோன்
தொண்டர் திருவுளத்து அமர்ந்தவன்
குமர தேசிகன்
அமரக் காவல ணாதியான்
வேற்படை குருபரன்
சுரந்தமா முனிக்கருள் குரவன்
பல்விழிக் கடவுளர்க்கு அருள்சேய்
மயிலூரும் கடவுளான்
சேயமலர் முகத்தான்
பகர்ந்தகனி வாயுள்ளான்
ஒருமொழியால் தொளைந்த கோ
பசுந்தோகை பரியூர்வான்
குறியவிந்த செங்கையான்
மங்கைப்புணர் மணவாளன்
கிளிரொளிக் குமரவேல்
தோத்திரக் கிளியைத் தோளில் சுமந்தோன்
வேல்புனை விளையாட்டான்
ஆட்டருந் தவத்தோன்

பிண்டக்கொருப் பதியாஞ்சேய்
சரவண தரவந்தோன்
வஞ்சியர் குல மன்னர்
மகளிரார் மருவும் வாழ்வோன்
வெற்பினத்தொறு நின்றோன்
வள்ளி நாயகன்
சண்முகத்தரசன்
பன்னிருக் காதுடைப் பரன்
வேட்டுவக் கன்னியை மணந்த காமுகன்
விகடமால்கரி வித்தகன்
சுப்பிரமணியன்
செவியார் விழிதருகுருபரன்
மறுமுகத்தமுகன்
குமுதமலரணையன்
சரவணோற் பவமுருகன்
நீலமயிற் பரியேறு நிமலவேலன்
முன்னியவர் விளையாடு முருகவேல்
புரந்தரனுக்கு அரசளித்த புனித வேல்
சூழ்வான் இரண்டு தோள் வல்லோன்
படைதாங்கு மீடுள்ளான்
மருப்பாடூர் திறற்றோளான்
பருகுகளிற்றுடன் பவளக் குன்று
விமல விழி உதவவரும் விந்தையான்
மகிழிளம் புதல்வன்
தொழிற் றகுபுகழ்க் குழகன்

தவளுளத் தனகன்
நற்றனையரிற் சிறுவன்
மருநெறித் தலைவன்
பாருளத் தையன்
கருதுநர்க்கெளியன்
சூர்வெருளும் வேல்வீரன்
வீறுடைப் புலமைசால் குகன்
நிலவு சேவகன்
பவள வான்குருத்து
புவியும் வானமும் போற்றிடும் புரியோன்
கலிவிட விலக்குதியான்
நான்முதற் புடைத்தகைக் குகன்
செம்பவள வாயினன்
ஆலிலத் தகைபகர் குகன்
கருணை மாகடல்

# தண்டபாணி சுவாமிகள் நூல்கள் பதிப்பாய் வந்தவை

| | | |
|---|---|---|
| 1. | அறிவபோத தந்தாதி | கௌமார சபை, திருவாமாத்தூர், 1973 |
| 2. | அருணகிரிநாத சுவாமிகள் புராணம் | கௌமார சபை, திருவாமாத்தூர், 1967 |
| 3. | அறுவகை இலக்கணம் | இந்து தியாலஜிக்கல் யந்திரசாலை, சென்னை,1988 |
| 4. | இராமலிங்க அடிகளார் பதிகம் | கௌமார சபை, திருவாமாத்தூர்,1963 |
| 5. | எழுபா எழுபது பொய் செப்பாக்கம் திருமால் பதிகம் | கௌமார சபை, திருவாமாத்தூர்,1971 |
| 6. | ஏகந்தான் இதழந்தாதி | இந்து தியாலஜிக்கல் யந்திர சாலை, சென்னை, 1988 |
| 7. | ஔவையார் பதிகம் | கௌமார சபை, திருவாமாத்தூர், 1966 |
| 8. | கணபதி ஆயிரம் | உலகத்தமிழ்க் கல்வி இயக்கம், 1984 |
| 9. | கலம்பகம் திரிவந்தாதி | ஸ்ரீநிதி அச்சுக்கூடம், 1977 |
| 10. | குருநாதன் அந்தாதி | கௌமார சபை, திருவாமாத்தூர், 1967 |

| | | |
|---|---|---|
| 11. | குருபரத்தத்துவ நூல் | கௌமார சபை, திருவாமாத்தூர், 1966 |
| 12. | கௌமார முறைமை | கௌமார சபை, திருவாமாத்தூர், 1964 |
| 13. | சடகோபர் சதக அந்தாதி | திரு. க. ரங்கசாமி நாயுடு அவர்கள், இடைப்பாக்கம் நினைவு மலர், 1963 |
| 14. | சண்முகநாதப் பெருமாள் பிரபந்ததிரட்டு | கௌமார சபை, திருவாமாத்தூர், 1968 |
| 15. | சாத்துக்கவி | சிதல்யாணம் கம்பெனியர் 1967. |
| 16. | சென்னைக் கந்தக்கோட்ட கந்தபெருமாள் தோத்திரத் | திரட்டு, 1898 |
| 17. | ஞாயிறு ஆயிரம் | தமிழ்பதிகம், சென்னை- 96, 1980 |
| 18. | தமிழலங்காரம் | கௌமார சபை, திருவாமாத்தூர், 1964 |
| 19. | தனிப்பாடற் திரட்டு | கௌமார சபை, திருவாமாத்தூர், 1968 |
| 20. | திருச்செந்திற்கோவை கௌமாரவிஜயம் | கௌமார சபை, திருவாமாத்தூர், 1968 |
| 21. | திருச்செந்திற் பைந்தங்கள் | சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், 1969 |
| 22. | திருமாலந்தாதி | கௌமார சபை, திருவாமாத்தூர், 1967 |
| 23. | திருமுருகன் திருவிளையாடல் கலிவெண்பா | கௌமார சபை, திருவாமாத்தூர், 1964 |

| | | |
|---|---|---|
| 24. | திருவாமத்தூர் தலபுராணம் | இந்து தியாலஜிக்கல் யந்திரசாலை, சென்னை, 1928 |
| 25. | திருவரங்கத் திருவாயிரம் திருமளாந்தாதி | பி. ஆர். ராமய்யா அச்சுக்கூடம், 1919 |
| 26. | தியானனுபூதி | கௌமார சபை, திருவாமாத்தூர், 1965 |
| 27. | தில்லை திருவாயிரம் | கலாரந்தநாகரம், 1988 |
| 28. | தில்லைபாதி ஸி நெல்லைபாதி | கழக வெளியீடு, 1964 |
| 29. | தோத்திரத் திரட்டு | கௌமார சபை, திருவாமாத்தூர், 1964 |
| 30. | தோத்திரப் பாமாலை | கௌமார சபை, திருவாமாத்தூர், 1964 |
| 31. | நானினச் சதகம் | திருமாவமத்தூர் முருகதாசபிள்ளை, 1951 |
| 32. | பழனி திருவாயிரம் | கிருஷ்ணன் பிரஸ், 1915 |
| 33. | புலவர் பிராணம் | கலாரத்னாகரம், 1908 |
| 34. | மயிலாசனம் கலம்பகம் | கௌமார சபை, திருவாமாத்தூர், 1924 |
| 35. | மனுநீதி திருநூல் | கௌமார சபை, திருவாமாத்தூர், 1924 |
| 36. | முசுருந்த நாடகம் | கௌமார சபை, திருவாமத்தூர், 1970 |
| 37. | முத்தமிழ் பாமாலை | கௌமார சபை, திருவாமாத்தூர், 1970 |
| 38. | முதலொழிய அந்தாதி | ஆதிகலாநிதி அச்சுக்கூடம், 1988 |

| | | |
|---|---|---|
| 39. | முருகதாதரனுபூதி | கௌமார சபை, திருவாமாத்தூர், 1964 |
| 40. | முருகப்பெருமாள் படைவீட்டு பாமாலை | அருட்பெருஞ்சோதி அச்சுக்கூடம், 1925 |
| 41. | முருகப்பெருமாள் பைந்தமிழ் திரட்டு | கௌமார சபை, திருவாமாத்தூர், 1970 |
| 42. | வண்ணத்தியல்பு | புலமை வெளியீடு, நாவல் ஆர்ட் அச்சுக்கூடம், 1987 |
| 43. | வண்ணமஞ்சரி | ந. மகாலிங்கம், பொள்ளாச்சி, 1980 |
| 44. | வருக்கக்குறள் | சென்னை தென்னிந்திய மகாஜன சபை, 1946 |
| 45. | வல்லநல்லூர்ப் பிரபந்ததிரட்டு | கௌமார சபை, திருவாமாத்தூர், 1971 |
| 46. | வேல் அலங்காரம் மயில் அலங்காரம் ஆறெழுத்து அலங்காரம், முருகானந்தலகிரி | சேகர் அச்சுக்கூடம், சென்னை |
| 47. | ஸ்ரீ முருகப்பெருமாள் பதிகம் | கௌமார சபை, திருவாமாத்தூர், 1966 |
| 48. | ஸ்ரீ முருகப்பெருமாள் பிள்ளைத் தமிழ் | கௌமார சபை, திருவாமாத்தூர், 1967 |

### ...திப்பில் வருபவை

| | |
|---|---|
| திருவேரகவெண்பா அந்தாதி | வி. அருள், சுவடியியல் பட்டயப்படிப்பு பதிப்பேடு, தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், 2005. |
| சைவ சதகம் | விஜயலட்சுமி, சுவடியியல் பட்டயப்படிப்பு பதிப்பேடு, தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், 2005. |
| சப்த சதகம் (முதல் பாகம்) | பாரதி, சுவடியியல் பட்டயப்படிப்பு பதிப்பேடு, தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், 2005. |
| சப்த சதகம் (இரண்டாம் பாகம்) | ந. பரிமளா, சுவடியியல் பட்டயப்படிப்பு பதிப்பேடு, தமிழ் இலக்கியத்துறை. சென்னைப் பல்கலைக்கழகம், 2005. |

## துணை நூற்பட்டியல்


| | | |
|---|---|---|
| 1. | அச்சும் பதிப்பும் | மா.சு. சம்மந்தம், மணி வாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை, டிசம்பர் 1997. |
| 2. | சுவடிப் பதிப்பியல் வரலாறு | இரா. இளங்குமரன், மெய்யப்பன் தமிழாய்வகம் சிதம்பரம். முதற்பதிப்பு, நவம்பர் 2001. |
| 3. | கதிரைவேற்பிள்ளையின் தமிழ் மொழி அகராதி, | சாரதா பதிப்பகம், சென்னை, அக்டோபர் 2003. |
| 4. | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் வரலாறு | தி.செ.முருகதாசசுவாமிகள் கௌமார சபை வெளியீடு, திருவாமாத்தூர்.இரண்டாம் பதிப்பு 1998. |
| 5. | சடகோபர் சதக அந்தாதி | திரு.க. ரங்கசாமி நாயுடு, இடைப்பாக்கம், நினைவு மலர், 1963. |

| | | |
|---|---|---|
| 6. | குருபர தத்துவ நூல் | கௌமார சபை வெளியீடு, திருவாமாத்தூர், 1966. |
| 7. | வாழ்வியற் களஞ்சியம் | தொகுதி 1, தஞ்சை பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1991. |
| 8. | Tamil Lexicon | University of Madras, 1982, Vol: 1-6 |

[illegible]

[illegible]

தெய்வமே துணை

T. 7106.